# புறநானூற்றில் ஆட்சி

**முனைவர் த. சிவலிங்கம்**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,**

**துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி,**

**அரும்பாக்கம், சென்னை-600106.**

## ஆய்வு நோக்கம்

சங்க இலக்கியத்தில் இரண்டு புறநூல்கள் உள்ளன. அவற்றில் மிகமுக்கிய புறநூல் புறநானூறு என்றால் மிகையாகாது. தமிழனின் தொன்மையும் பெருமையும் சிறப்பையும் எடுத்துரைக்கிறது. மூவேந்தர்கள், அரசர்கள், மன்னர்கள் குறுநிலமன்னர்கள் நிலக்குழுத் தலைவர்கள் கடையெழு வள்ளல்கள் போர் வீரர்கள் மறக்குடி மகளிர், பொது மக்கள் என எல்லா நிலை மக்களின் வாழ்க்கையை பதிவு செய்துள்ள வரலாற்றுக் களஞ்சியம். இக்களஞ்சியத்தில் ஆட்சி குறித்தும் ஆட்சி குறித்த பதிவுகளை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

**ஆட்சி** :- அரசு என்பது அதன் ஆளுமை தன்மையால் நிலை பெறுகிறது. ஆளுமை தன்மை குறையுமாயின் அரசு நிலைபெற முடியாது. ஆட்சி

என்பதற்கு "உரிமை, (Lordship, Proprietorship, Ownership), ஆளுகை (Government, Rule, Reign)" என்னும் பொருளைத் தருகிறது தமிழ் பேரகராதி.1

"ஒரு சமூகத்தில் ஒருவனோ, அல்லது ஒரு ஸ்தாபனமோ கட்டளையிட அக்கட்டளைக்கு அடங்கி, அச்சமூகத்தைச் சார்ந்த மற்றவர்கள் நடந்து வந்தால் அந்த மனிதனை அல்லது ஸ்தாபனத்தை, அரசாங்கம் என்று சொல்வார்கள். அரசாங்கம் இல்லாத சமூகம் கிடையாது. சமூகமும் அரசாங்கமில்லாமல் நிலைக்க முடியாது" 2

அரசு வல்லாண்மையின் அடிப்படையில் உருவானது. எனவே அரசனே அனைத்துப் பொறுப்பாளனாகவும் விளங்கினான். அதனால்தான் "மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகு" (புறம்.186) என்ற முக்கியத்துவமும் தோன்றியது எனலாம். எனவே மன்னனே அனைத்து விதமான முறைகளையும் வகுத்து செயல்பட்டான் என்பது தெளிவுறுகிறது

"பண்டையத் தமிழகத்தில் அதிகாரங்கள் பிரிக்கப்படவில்லை, அதனால் சட்டம் அமைத்தற்கென்று இக்காலத்திற்போல் ஒரு தனி அவை இருந்ததில்லை . அரசனும் அவனது துனையதிகாரிகளுமே சட்டம் அமைத்தல், செயற்படுத்தல், நீதி ஆகிய மூன்று வினைகளையும் புரிந்து வந்தனர். சிற்றரசனாயினும் பேரரசனாயினும் சட்டம் அமைக்கும் அதிகாரம் அரசனிடத்திலேயே இருந்தது.

அரசனுக்கும் குடிகளுக்கும் தீங்கு விளைவிக்காத பழைமையான மற்ற வழக்கங்களெல்லாம் அப்படியே தழுவப்பெற்றன. அவ்வப்போது தேவைப்பட்ட திருத்தங்களும், புது விதிகளுமே அரசனால் ஆக்கப்பட்டன. இவை பழஞ் சமூகத்தில் நிலவிய பொதுவான அரச முறைகளாகும்"3 என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

"தமிழ்நாட்டின் அரசுருவாக்கம் (The State Formation) எவ்வாறு நிகழ்ந்தது? எப்படி நிகழ்ந்தது திருவள்ளுவர் ரொம்பச் சாதுரியமாகப் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் இவை ஆறும் உடையான் அரசருள் ஏறு என்று கூறிவிட்டார். அவர் அரசை ஆள் நிலைப்படுத்தி (Personalize) படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறும் அரசனிடத்தில் உண்டு எனக் கூறுகிறார்",4 எனவே இவற்றின் மூலம் தான் தன் எல்லை பரப்பில் உள்ள மக்களை அரசன் ஆட்சி செய்தான் என்பதை அறியலாம்.

## அறநெறி

புறநானூற்றில் பல இடங்களில் அறநெறி பற்றிக் கூறப் பெற்றிருப்பினும் இதுதான் அறம் என்ற தெளிவான வரையறையைக் காண இயலவில்லை . திருவள்ளுவர் குறளில் 'மனத்துக்கண் மாசிலன் ஆதலும்' (குறள்:34), அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்' (குறள்-350), 'முகத்தான மர்ந்தினிது

நோக்கி அகத்தானாம் இன்சொ லினிதே அறம்' (குறள்.93) என்று அறத்திற்கென்று ஒரு வரையறையைத் தருகிறார்.

“உடைமை பற்றிய ஓர்மைகள் வேளாண்மையும், வாணிபமும் இவற்றை ஆட்சி புரிந்த அரசும் மேல் எழுந்த நாகரிகத்தில் தோன்றின. உடைமை பற்றிய ஓர்மைக்கும், சுயகட்டுப்பாட்டிற்கும் நெருக்கமான பிணைப்பு இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பிணைப்பிற்கான கருத்தியல் சாதனமாக

அறங்களைக் (Ethics) கூறலாம். அறம் சுயஒழுங்கு, கட்டுப்பாடு, உடைமை, ஓரினம், நாகரிகம் ஆகியவை ஒன்றையொன்று சார்ந்தவை, தன்னைத் தானே வெல்லுதல் என்னும் அறப்பயிற்சி, வெளியில் மனித உற்பத்தி விளைந்த உடைமை வெல்லுதல் என்ற ஆள்வினைக்குரிய முன் நிபந்தனை என்பதை அறியலாம்”5 என்னும் கருத்தும் இங்கு ஒப்பு நோக்குவதற்கு உரியது எனலாம்.

தூய்மையான எண்ணமும் தூய்மையான செயலுமே அறம் எனப்படும். அறநெறியுள் ஒழுங்கும் அடங்கும். எனவே மனிதனுடைய சிந்தனையோடும், செயலோடும் பொருந்தும் நெறியே அறநெறியாகும். நான்கு வகைப் படைகளைப் பெற்றிருப்பினும் அரசின் வெற்றிக்கு அறநெறியே அடிப்படையாகும் (புறம். 55). அரசியலுக்கு அறநெறியே இன்றியமையாது என்பதை இக்கருத்து மேலும் வலியுறுத்துகிறது.

நாடு என்பது பொது என்ற கருத்துரு தொடக்க காலத்தில் இருந்தது. தனித்தனியாக எல்லை வகுத்து பெயர் வைத்து ஆண்ட காலத்திலும் 'நாடு பொது' என்னும் கருத்து மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. தம்தம் திறமையால் அரசுகள் மோதிக் கொண்டு வீழ்வதை விரும்பவில்லை. இவ்வாறு பொது என்பதை மறந்து தம்தமக்குரியது என்று போரிட்டு மாண்ட நிகழ்ச்சிகளைப் பார்த்த பின்னர் பொதுவெனக் கருதப்பட்ட மூவேந்தருடைய நாடு மூன்றையும் பொதுவெனக் கொள்ளாது தமக்கேயுரியதெனக் கொண்டு ஆண்ட வேந்தர்களின் வாழ்நாட்கள் கழிந்தன. அவர்கள் சேர்த்து வைத்த செல்வங்களும் அவர்களின் உயிர் பிரியும்போது துணையானதில்லை. அவர்கள் செய்யும் அறவினையேயே மறுமைத் துணையாய் இன்பம் தருவதாகும் (புறம்.357) எனக் கூறுகிறது.

சேரமான் மாவண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒன்றாகக் கூடியிருந்த நிலையில் பார்த்த ஔவையார் வேந்தர்களே நிலவுலகம் வேந்தர்க்குத் தாயினும் இறக்க நேரிடும்போது உலகம் வழுவதில்லை. அரசியல் பேற்றுக்குரிய நோன்மை உடையோர் வேற்று நாட்டவரேயாயினும் அவர்க்குரியதாய்ச் சென்றொழியும். ஆதலால் அரசியலை அறநெறியில் செலுத்துங்கள் என மூவரையும் (புறம்.367) வேண்டுகிறார்.

நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் அறிவுறுத்தும்போது 'அறத்தையுடையையாயின் இது நின தன்றோ ' (புறம்.44) என அரண்மனையின் வாயிலைத் திறத்தல் செய் என வேண்டுகிறார்.

அறம் பற்றி, அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப (தொல்.பொருள்.இளம்.411) இன்பமும் பொருளும் அறனுமென்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் (தொல்.பொருள்.இளம்.89) என தொல்காப்பியமும்,

அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின் (புறம்.9:6) அறம் துஞ்சும் செங்கோலையே (புறம்.20:17)புறஞ்சிறை மாக்கட்கு அறம் குறித்து அகத்தோர் (புறம்.28:11) அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல (புறம்.31:2) அறம் பாடின்றே - ஆயிழை கணவ (புறம்.34:7) அறம் நின்று நிலையிற்று ஆகலின், அதனால் (புறம்.39:9) அறம் துஞ்சு உறந்தைப் பொருநனை; இவனே (புறம்.58:9) அறத்தின் மண்டிய மறப் போர் வேந்தர் (புறம்.62:7) பறம்பு பாடினரதுவே; அறம் பூண்டு (புறம்.108:4) அறம் செய்தீமோ, அருள் வெய்யோய்! என, (புறம்.145:7) மா சோடு குறைந்த உடுக்கையள் அறம் பழியா (புறம்.159:13) அறம் புகழ்ந்த வலை சூடி (புறம்.166:4) அறம் அறக் கண்ட நெறி மான் அவையத்து (புறம்.224:4) அறம் குறித்தன்று; பொருள் ஆகுதலின் (புறம்.362:10) அறுதொழில் அந்தனர் அறம் புரிந்து எடுத்த (புறம்.397:20) எனப்

புறநானூறும், அறம் பொருள் இன்ப மென்றம் மூன்றில் (கலி.141:3) என கலித்தொகையும் குறிப்பிடுகிறது.

அகவாழ்க்கை, புறவாழ்க்கை இரண்டிலும் அறம் கலந்திருந்த நிலையை மேற்கூறிய பாடல்களின்வழி விளங்குகின்றன. எனவே ஆள்வோர் அந்நெறியில் இருந்து தவறும்போது இடித்துக் கூறும் நிலையில் இப்புலவர்கள் இவ்வறநெறியை வற்புறுத்தியிருக்கின்றனர்.

**இறைமை**

இறைமை என்பது அரசின் கூறுகளுள் ஒன்று. "அரசுக்குரிய கட்டற்ற பேரதிகாரமே இறைமையாகும். ஒரு நாட்டின் மக்கள் உட்பட்ட அனைத்தின் மீதும் தடையின்றியும், வரையறையின்றியும் இவ்வதிகாரம் செலுத்தப்படும். இவ்வதிகாரம் அரசர் போன்ற ஒருவரிடமும் அடங்கியிருக்கலாம். ஒரு சிலரிடமும் ஒரு குழுவிடமும் அடங்கியிருக்கலாம். இவ்விறைமையின் மற்றோரியல்பு அவ்வரசினை அண்டை நாடுகள். அயல்நாடுகள் அனைத்தும் உடன்பட்டு ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். இவ்வாறு இறைமை பெற்றவர்களாகச் சங்க இலக்கியத்தின் வழி சேரர், சோழர், பாண்டியர் இவர்களைக் கொள்ள இயலும்"[6] என்னும் இயக்கத்தின் மூலம் இறைமை என்னும் சொல்லுக்குப் பொருளை விளங்கி கொள்ளலாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் படையெடுத்து வந்த வேந்தரைத் தோற்றோடச் செய்யவில்லையென்றால் எனது குடி நிழலில் வாழ்வோர் எம்மிறை கொடியன் எனக் கண்ணீர் பரப்பிக் குடி பழிதூற்றுக்கோலை உடையவன் ஆவேனாகுக, எனது நிலப்பரப்பு புலவர் பாடாதொழியட்டும்'. 'இரப்பவர்க்குக் கொடுக்க இயலாத இன்மையை நான் பெறுவேனாகுக' (புறம்.72) என வஞ்சினங் கூறி தான் இறையாண்மையை வெளிப்படுத்துகிறான்.

தமிழ்நாட்டிற்குரிய முரசு, முழங்கு, படை கொண்ட மூவருள்ளும் சோழன் கிள்ளி வளவனது அரசே, அரசு என வெள்ளைக்குடி நாகனார் பாராட்டுகிறார். மேலும், இப்பாராட்டு அரசன் செய்ய வேண்டிய கடமைகளை நினைவூட்டும் வகையில் அமைந்ததாகும். அறநெறி வழி எல்லோரும் செல்லும்போது பொது நெறியில் இருந்து பிறழாமல் நடத்திச் செல்லுதலாம். இவ்வாறு அறநெறி வழி ஆட்சி செய்தாலும் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விடக்கூடாது. செய்ய வேண்டிய செயல்களைச் செய்தலே கடமை

எனப் பெறும். இங்கு வெள்ளக்குடி நாகனார் கிள்ளிவளவனது கடமையை நினைவூட்டும் வகையில் இவனது இறைமையை வெளிப்படுத்துகிறார்.

காவிரியின் வளத்தால் சிறந்து விளங்கும் நினது நாடே நாடெனப்படுவது, நினது வெண்கொற்றக் குடை குடி மக்களின் துன்பத்தை மறைக்கப் பயன்பட வேண்டும். போர்க்களத்தில் படைகள் ஈட்டித் தரும் வெற்றிக்கு அடிப்படை உழவுத்தொழிலால் பெறும் பயனேயாகும். மழை பொழியவில்லையென்றாலும், வருவாய் குறைந்தாலும், இயற்கை மாறி செயற்கைத் தோன்றினாலும், மக்கள், குடிமக்களைக் காக்கும் கடமையுள்ள அரசனையே பழிப்பர். இதனை அறிந்து உழவர்களையும், குடிமக்களையும் காப்பது உனது கடமை (புறம்.35) என்ற அறிவுரையின் மூலம் நாட்டில் தலைவன் மேற்கொள்ள வேண்டிய இறைமையை உணர்த்துகின்றார்.

**அரசுரிமை**

அரசுக்குரிய உரிமை வழிவழியாக வந்தது. தந்தைக்குப் பிறகு மகன் என்ற முறையில் உரிமை தொடர்ந்து வந்தது எனலாம். அதிலும் மூத்தோர்க்கு அந்த உரிமை வருவதையும் உண்டு என்பதை,

மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப் பால்தர வந்த பழ விறற்றாயம்

(புறம்.75:1-2) என்ற தொடரின் வழி அறியலாம்.

கோப்பெருஞ்சோழனுக்கும் அவனின் மக்களுக்கும் இடையே உரிமைப் போர் வந்த போது புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும்

புலவர் 'நின்னுரிமை நின் மக்கட்கு உரியதாகும். நின் மக்கள் தோற்பின் நின் பெருஞ்செல்வத்தை யாருக்குக் கொடுப்பாய்? நீ தோற்பின் பழியே மிஞ்சும்' (புறம்.213) எனக் கோப்பெருஞ்சோழனுக்கு அறிவுரை கூறுகிறார். இதன்மூலம் இயல்பாகவே தந்தையின் உடைமை மகனுக்கானது என்ற செய்தியை அறிந்து கொள்ளலாம். "சேர, பாண்டிய அரசர்கள் பரம்பரையில் அரசுரிமையைப் பற்றித் தகராறு ஏதேனும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், சோழ நாட்டில் பல உள் நாட்டுக் கலகங்களும், பட்டத்துக்கு உரிமை பற்றிய பல தகராறுகளும் நடந்தன என்றும் இரண்டாம் கரிகாலன் அரசு கட்டிலேறிய வரலாறு. இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும்"7 மேலும், அரசுரிமைக்காக என்பது சீருடை முரசுகெழுதாயத்து அரசோ தஞ்சம்' (புறம்.73:3) என்ற தொடரின் மூலம் அரசுரிமை முரசுடன் தொடர்வது என்பது பெறப்படுகிறது.

அரசுரிமைக்குப் போர்கள் நிகழ்ந்ததையும் புறநானூறு பதிவு செய்துள்ளது. நெடுங்கிள்ளியும், நலங்கிள்ளியும் உரிமை காரணமாகப் பகைமை கொண்டு போர் புரிந்த போது கோவூர்கிழார் உன்னால் எதிர்க்கப் பெறுபவன் பனம் பூமாலையணிந்த சேரனும் இல்லை; வேம்பின் மாலையணிந்த பாண்டியனும் இல்லை; உன்னுடைய கண்ணியும் உன்னுடன் சண்டையிடுவோன் கண்ணியும் ஆத்தியால் கட்டப்பட்டதே. எனவே, இப்போர் சோழர் குடிக்குத் தீமையை

விளைவிக்கும். உன்னை போன்ற வேந்தர்க்கு மிக்க மகிழ்ச்சியையும் விளைவிக்கும் (புறம்.45:1-7) எனக் கூறுகிறார். கோவூர்கிழாரின் இப்பாடல் அக்கால அரசுரிமைப் போரைத் தெளிவுபடுத்துகின்றது.

உண்டாட்டு நிகழும் போது அவரவர் உரிமை முறையறிந்து உணவைப் பெறல் வேண்டும் என்ற மரபு இருந்துள்ளது. இம்மரபு மீறப்படும் போது சினந்தோன்றுதல் இயல்பு. இவ்வாறு ஒரு வீரன் முறை தவறினான் எனக் கோபம் கொண்ட போது விரிச்சூயூர் நன்னாகனார் என்னும் புலவர் வேந்தற்கு ஏந்திய நறவை (நறவம்-கள்) தன்முறை வருவதற்குள் விலக்கி வாய்வாள் பற்றி நின்றனன் எனக் கோபம் கொள்ளாதீர். அவ்வீரன் போரிலும் தன் முறை வரவேண்டும் என்று காத்திருக்காமல் பெரும் படையை எதிர்த்து போர் செய்து நிற்பான் எனக் கூறுகிறார் (புறம்.292). அரசுரிமை என்பது தந்தையுரிமை, மூத்தோர் உரிமை, மரபுரிமையின் மூலம் கிடைத்ததை மேற்கூரிய கருத்துகள் தெளிவுப்படுத்துகின்றது.

## தொகுப்புரை

புறநானூற்று மன்னர்கள் அறநெறியுடன் ஆட்சி செலுத்தியமையும், அறநெறிக்கு உட்பட்டே போர் புரிந்த நிலையும் பாடபுறநானூற்றுச் சமூகப் பின்புலம் என்னும் இவ்வியலின் மூலம்

சமூகம் என்பதற்கான வரையறையும் அறிஞர்கள் பலரின் கருத்துக்களும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. புறநானூற்று இலக்கியப் பின்புலமும் அவற்றின் கூறுகளும் விவரிக்கப்பட்டுள்ளன. மன்னர்கள் இரவலர்களுக்கு அளித்த உணவு, உடை, பரிசுப்பொருட்கள் முதலியவற்றின் மூலம் அவர்களின் கொடையின் தன்மையும், இரவலர்களுடன் அவர்களும் சேர்ந்து உணவு உண்ட நிலையின் வாயிலாக அவர்களின் பரந்துபட்ட உள்ளத்தின் நிலையும் பகுத்துண்ணும் பண்பும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பண்டையத் தமிழர்களின் உணவாக விலங்குகளின் இறைச்சியும், நறவை என்னும் கள்ளும் அளிக்கப்பட்டமையும் அறிய முடிகின்றது. வேந்தர், வேந்தன், வேந்து, அரசு, மன்னர், மன்னன் ஆகியோரின் சமூக நிலையும் இப்பெயர்கள் புறநானூற்றில் பயின்று வந்துள்ளமையும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அரசின் பின்புலக் கூறுகளான மக்கள், நிலம், முறையான ஆட்சி, இறைமை முதலானவை விளக்கப்பட்டுள்ளது. நிலப்பரப்பு, மகள் மறுத்தல் முதலானவை போருக்குக் காரணமாக அமைந்த நிலையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அரசர்களுக்கு அறநெறியை உணர்த்தும் நிலையில் புலவர்கள் இருந்தமையும் அவர்கள் நெறி தவறியயிடத்து அவர்களுக்கு நன்மையை எடுத்துக்கூறி

நன்னெறி படுத்தியமையும் அரசுரிமை முறையில் தந்தையின் உடைமை மகனுக்கானதாக
இருந்த நிலையினை புறநானூற்றுப் பாடல்களின் வழி அறியப்பட்டுள்ளது.

**சான்றாண் விளக்கம்**

1. தமிழ் பேரகராதி, தொகுதி-1, ப.215.
2. கலைக்களஞ்சியம், தொகுதி ஒன்று, ப.153.
3. ஆறுமுகம், அ., சங்க இலக்கியத்தில் குடும்பம், உடமை, அரசு ., ப.204.
4. கார்த்திகேசு சிவத்தம்பி, சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், ப.60.
5. ராஜ் கௌதமன், தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப.17.
6. ஆறுமுகம், அ., சங்க இலக்கியத்தில் குடும்பம், உடமை, அரசு, ப.209.
7. அறவாணன், க.ப., அற்றை நாள் காதலும் வீரமும், ப.226.

## துணை நூற் பட்டியல்

1. பரிமணம் அ.மா, பாலசுப்பிரமணியம் புறநானூறு தொகுதி 1, தொகுதி 2 மூலமும் உரையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை. முதல் பதிப்பு 2004.
2. ஆறுமுகம் அ, சங்க இலக்கியத்தில் குடும்பம், உடமை, அரசு பாவேந்தர் பதிப்பகம், திருமழப் பாடி, திருச்சி, முதல் பதிப்பு 1994.
3. ராஜ் கௌதமன், தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், விடியல் பதிப்பகம், மசக்காளி பாளையம் வடக்கு, கோவை. முதல் பதிப்பு 2008.
4. அறவாணன் க.ப. அற்றைநாள் காதலும் வீரமும் பாரிநிலையம், சென்னை. முதல் பதிப்பு 1994.
5. தமிழ்ப் பேரகராதி தொகுதி 1, தொகுதி 5, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005. முதல் பதிப்பு 1982.
6. கார்த்திகேசு சிவத்தம்பி, சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600113. முதல் பதிப்பு 2009.
7. கலைகளஞ்சிம் தொகுதி 1, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை. பதிப்பு 1956.